# <u>தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)</u>

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | **<u>ஆதி திராவிட மகளிருக்கான வேளாண் நிலம் வாங்கும் திட்டம்</u>**<br>இத்திட்டம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் சமுதாய பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு முன்னோடி திட்டமாகும். நிலமற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விவசாய நிலங்கள் சொத்துக்களாக உருவாக்கி விவசாய உற்பத்திக்கு தேவைப்படுகின்ற விவசாய உபகரணங்கள் வழங்கி உற்பத்தித் திறனை பெருக்கி வருகின்றது.<br><br><u>அ) நிலம் வாங்கும் திட்டம்</u><br>இத்திட்டத்தில் நிலம் வாங்குவதற்காக வழங்கப்படும் தொகை அதிக பட்சமாக ரூ.1.00 இலட்சமாகும். அத்தொகை 50% மானியமாகவும் 50% வங்கிக் கடனாகும். இத்திட்டத்தில் முத்திரைத் தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 75%விலக்கு அளிக்கப்படுகிறது.<br><br>ஆ) நில அபிவிருத்தித் திட்டம்<br>இத்திட்டத்தில் நில அபிவிருத்தி நீர்பாசனம் மற்றும் கால்நடை வளர்ப்புகளுக்காக ரூ.1.00 இலட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்தொகையில் 50% மானியமாகவும் 50%வங்கிக் கடனாகும். பயன் பெறும் பயனாளிக்கு முன்னுரிமை மற்றும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் விவசாய மின் இணைப்புகள் இலவசமாக வழங்கப்படும். | ➢ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை<br>➢ வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 18 வயது முதல் 55 வயதிற்குட்பட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிர்.<br>➢ ஆண்டு வருமானம் கிராமபுறத்திற்கு ரூ.18,460 நகர் புறத்திற்கு ரூ.28,536<br>➢ பயனாளிகள் 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் அல்லது 2.5 ஏக்கர் வரை நஞ்சை நிலம் சொத்தாக வாங்கலாம். | ➢ சாதிச்சான்றிதழ்<br>➢ வருமானச் சான்றிதழ்<br>➢ குடும்ப அட்டை நகல்<br>➢ வாங்க உத்தேசித்துள்ள நிலக் கிரைய உடன்படிக்கை<br>➢ வில்லங்கச் சான்றிதழ் மற்றும்<br>➢ சிட்டா அடங்கல் | மாவட்ட மேலாளர்கள், தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை – 101.<br>தொ.பே.எண். 044– 2615 4075<br>நிகரி 26154107 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| **2.** | **<u>மகளிர் சுய உதவி குழுக்களுக்கான சுழல் நிதி</u>**<br><br>குழு உறுப்பினர்களின் ஆற்றலை மேம்படுத்த, குழு ஆரம்பித்து 6 மாதங்களுக்குப் பிறகு, முதலாவதாக தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிட பழங்குடியின மகளிர் உதவி சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,000/– தாட்கோ மானியம் மற்றும் ரூ.15,000/– வங்கிக் கடன் ஆக மொத்தம் ரூ.25,000/– சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. | ➢ தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுவாக இருக்கவேண்டும்.<br><br>➢ குழு ஆரம்பித்து 6 மாதங்களுக்குப் பிறகு, முதலாவதாக தர நிர்ணயம் செய்யப் பட்டு சுழல் நிதிக்கு தகுதி வாய்ந்த குழுவாக இருத்தல் வேண்டும். | ➢ மகளிர் சுய உதவி குழுக்கள் விண்ணப்பங் களை முறையாக பூர்த்தி செய்து சாதி சான்றிதழ் மற்றும் தர நிர்ணய சான்றுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக திட்ட அலுவலர் மூலம் அல்லது நேரடியாகவோ தாட்கோ, மாவட்ட மேலாளருக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும்<br>➢ ஆதி திராவிட நல விரிவாக்க அலுவலரிடமும் சமர்ப்பிக்கலாம். | திட்ட அலுவலர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் (மற்றும்)<br><br>மாவட்ட மேலாளர்கள், தாட்கோ<br><br>(மற்றும்)<br><br>ஆதி திராவிட நல விரிவாக்க அலுவலரிடமும் சமர்ப்பிக்கலாம். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை – 101.<br><br>தொ.பே.எண். 044– 2615 4075<br><br>நிகரி 26154107 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 3. | <u>ஆதி திராவிட மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார உதவி திட்டம்</u><br><br>ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.5.00 இலட்சம் வரை நிதி உதவியும் அதில் 50% திட்ட செலவில் தாட்கோ மானியமாக வழங்கப்படும். 50% வங்கிக் கடன். ரூ.2.50 இலட்சம் வரை பயனாளி பங்குத் தொகை இல்லை. ரூ.2.50 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரை 5%பயனாளி பங்குத் தொகை. | ➢ 12 முதல் 20 உறுப்பினர்கள் கொண்ட இந்து ஆதி திராவிட மகளிருக்கு வழங்கப்படுகிறது<br>➢ தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுவாக இருக்கவேண்டும். | மகளிர் சுய உதவிக் குழுக்கள் விண்ணப்பங் களை முறையாக பூர்த்தி செய்து சாதி சான்றிதழ் மற்றும் திட்ட அறிக்கையுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக திட்ட அலுவலர் மூலம் அல்லது நேரடியாகவோ தாட்கோ, மாவட்ட மேலாளருக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும். | திட்ட அலுவலர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் (மற்றும்)<br><br>மாவட்ட மேலாளர்கள், தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை– 101.<br><br>தொ.பே.எண். 044– 2615 4075<br><br>நிகரி 26154107 |
| 4. | <u>தனி நபர் கடன் திட்டம்</u><br>தனி நபர் கடன் அதிகபட்சம் ரூ.7.50 இலட்சம் தாட்கோ மான்யம் 30% அல்லது அதிக பட்சமாக ரூ.25,000/– வீதம் வங்கிக் கடன் (பருவக் கடன்) ஆக வழங்கப்படும். ரூ.1.00 இலட்சம் வரை பயனாளி பங்குத் தொகை இல்லை. ரூ.1.00 இலட்சத்திற்கு மேல் 5% பயனாளி பங்குத் தொகை. | ➢ வயது வரம்பு 18 முதல் 55 வரை இருத்தல் வேண்டும்<br><br>➢ குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறத்தில் ரூ.18,460/–, நகர்புறத்தில் ரூ.28,536/– இருத்தல் வேண்டும் | ➢ குடும்ப அட்டை நகல்<br>➢ சாதிச் சான்று<br>➢ இருப்பிடச் சான்றிதழ் நகல்<br>➢ வருமான சான்றிதழ்<br>➢ விலை பட்டியல் | ஆதி திராவிட நல விரிவாக்க அலுவலர் (மற்றும்) மாவட்ட மேலாளர்கள், தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை – 101.<br><br>தொ.பே.எண். 044– 2615 4075<br>நிகரி 26154107 |
| 5. | <u>ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத்திட்டம் ( SEPY)</u><br>மாவட்டத்திற்கேற்ற தகுதி வாய்ந்த சுயவேலைவாய்ப்பு அளிக்க கூடிய திட்டங்களை தேர்வு செய்து தகுதி வாய்ந்த ஆதி திராவிட இளைஞர்களுக்கு தேவையான பயிற்சியுடன் கடன் உதவி வழங்கும் திட்டம். இதில் தாட்கோ மான்யமாக ரூ25,000/– வழங்கப்படுகிறது. | ➢ வயது வரம்பு 18 முதல் 55 வரை இருத்தல் வேண்டும்<br>➢ குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறத்தில் ரூ.18,460/–, நகர்புறத்தில் ரூ.28,536/– இருத்தல் வேண்டும்<br>➢ தொழிலுக்கேற்ப கல்வி தகுதி பெற்றிருக்கவேண்டும்.<br>➢ வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்கவேண்டும். | ➢ குடும்ப அட்டை நகல்<br>➢ சாதிச் சான்று<br>➢ இருப்பிடச் சான்றிதழ் நகல்<br>➢ வருமான சான்றிதழ் | மாவட்ட மேலாளர்கள், தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை– 101.<br><br>தொ.பே.எண். 044– 2615 4075<br><br>நிகரி 26154107 |
| 6. | <u>மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதித் திட்டம்</u><br>இத்திட்டத்தில் பயனாளிகள் விரும்பும் வருவாய் ஈட்டக் கூடிய தொழில் புரிய ரூ.10,000/– வரை அல்லது ரூ.10,000 மதிப்புள்ள தொழில் உபகரணங்கள் 100% மான்யம் இலவசமாக வழங்கப்படுகிறது. | ஆதி திராவிட இனத்தை சார்ந்த கொத்தடிமைகள், விதவைகள், ஊனமுற்றோர்கள், ஆதரவற்றோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும் | ➢ குடும்ப அட்டை நகல்<br>➢ சாதிச் சான்று<br>➢ இருப்பிடச் சான்றிதழ் நகல்<br>➢ வருமான சான்றிதழ்<br>➢ விலை பட்டியல் | மாவட்ட ஆட்சியர் (மற்றும்) மாவட்ட மேலாளர்கள் தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை – 101.<br>தொ.பே.எண். 044– 2615 4075<br>நிகரி 26154107 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 7. | <u>ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்துவ இளைஞர்களுக்கு தொழில் கல்வி பயிற்சித் திட்டம்</u><br>ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்துவ இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு தரக்கூடிய பயிற்சி, கணினி பயிற்சி, செவிலியர் பயிற்சி, உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் பயிற்சி, ஆடை வடிவமைப்பு, ஆடை தயாரித்தல் மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் இதர வகையான பல்வேறு பயிற்சிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இலவசமாக வழங்கப்படுகிறது. | ➢ வயது 15 முதல் 35 வரை<br>➢ ஆதிதிராவிடர் / பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்துவ இளைஞர்கள்<br>➢ பயிற்சிக்கு தேவையான அடிப்படை கல்வித் தகுதி | ➢ குடும்ப அட்டை நகல்<br>➢ சாதிச் சான்று<br>➢ கல்வி தகுதிச் சான்றிதழ் | மேலாண்மை இயக்குநர் தாட்கோ தலைமையகம், சென்னை<br>(மற்றும்)<br>மாவட்ட மேலாளர்கள் தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை – 101.<br>தொ.பே.எண். 044– 2615 4075<br>நிகரி 26154107 |
| 8. | <u>என்.எஸ்.கே.எப்.டி.சி (NSKFDC)</u><br>தனிநபர் திட்டங்கள் அதிக பட்ச அலகு தொகை ரூ.5.00 இலட்சம் மான்யம் 30% அதிக பட்சம் ரூ.25,000/– மீதித் தொகை பருவக் கடனாக குறைந்த வட்டியில் தாட்கோவினால் வழங்கப்படும். | ➢ சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள்.<br>➢ வயது 18 முதல் 55 வரை இருத்தல் வேண்டும்.<br>➢ உள்ளாட்சி நிருவாகத்தால் வழங்கப்பட்ட சுகாதாரப் பணியாளர் உறுதி சான்று | ➢ உள்ளாட்சி நிருவாகத்தால் வழங்கப்பட்ட சுகாதாரப் பணியாளர் உறுதி சான்று<br>➢ குடும்ப அட்டை நகல்<br>➢ மாத சம்பள பட்டியல்<br>➢ விலைப் பட்டியல் | மாவட்ட மேலாளர்கள் தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை – 101.<br>தொ.பே.எண். 044– 2615 4075<br>நிகரி 26154107 |
| 9. | <u>தேசிய துப்புரவுப் பணியாளர் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் ( NSLRS )</u><br><br><u>(அ) சுபமதி சுய உதவிக்குழுக்கள்</u><br>குழுக்கடனாக உறுப்பினர்கள் பத்து முதல் இருபது நபர் வரை அதிகபட்ச அலகு தொகை ரூ.5,00,000/– வழங்கப்படும். இதில் மான்யம் ரூ.1,00,000/– விளிம்பு தொகை ரூ.75,000/– வங்கிக் கடன் ரூ.3,25,000/– | ➢ சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள்.<br>➢ வயது 18 முதல் 55 வரை இருத்தல் வேண்டும்.<br>➢ தொண்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்டு மகளிர் மேம்பாட்டுகழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குழுக்கள் | ➢ சுபமதி மகளிர் சுய உதவிக் குழுக்கள் விண்ணப்பங்களை முறையாக பூர்த்தி செய்து சாதி சான்றிதழ் மற்றும் தர நிர்ணயம் சான்றுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக திட்ட அலுவலர் மூலம் அல்லது நேரடியாகவோ தாட்கோ, மாவட்ட மேலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் | மாவட்ட மேலாளர்கள் தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை – 101.<br>தொ.பே.எண். 044– 2615 4075<br>நிகரி 26154107 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| | **ஆ) குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் கடன்**<br><br>குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் கடனாக அதிகபட்ச அலகு தொகை ரூ. 50,000/– ஆகும். இதில் மான்யம் அலகு தொகையில் 50% அதிகபட்சமாக ரூ.10,000/– விளிம்புத் தொகை அலகு தொகையில் 15% அதிக பட்சமாக ரூ. 7,500/–மீதம் ரூ. 32,500/– வங்கி கடனாக வழங்கப்படும். | ➢ சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள்.<br>➢ வயது 18 முதல் 55 வரை இருத்தல் வேண்டும். | ➢ உள்ளாட்சி நிருவாகத்தால் வழங்கப்பட்ட சுகாதாரப் பணியாளர் உறுதி சான்று<br>➢ குடும்ப அட்டை நகல்<br>➢ மாத சம்பள பட்டியல்<br>➢ விலைப்பட்டியல் | மாவட்ட மேலாளர்கள் தாட்கோ | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை – 101.<br>தொ.பே.எண். 044– 2615 4075<br>நிகரி 26154107 |